விவசாயிகளின் போராட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாது

வைகோ

காங்கயம், பிப். 13: விளைநிலங்களில் உயர் மின் கோபுரங்கள் அமைப்பதற்கு எதிரான விவசாயிகளின் போராட்டத்தை இனி கட்டுப்படுத்த முடியாது என்று வைகோ பேசினார்.

திருப்பூர் மாவட்டம், காங்கயம் வழியாக உயர் மின் கோபுரம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு காங்கயம் பகுதி விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

நிழலிகவுண்டன்பாளையம், காடையூர், சடையபாளையம், இல்லியம்புதூர், ராமபட்டினம், சிவன்மலை, பெருமாள்மலை, படியூர், கீரனூர் ஆகிய கிராமங்கள் வழியாக உயர் மின் கோபுரங்கள் அமைக்கப்பட்டால் விவசாயம் முற்றிலும் பாதிக்கும் என விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

காங்கயத்தை அடுத்த நிழலிகவுண்டம்பாளையத்தில் நடைபெற்ற விவசாயிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகிறார் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ.

இந்நிலையில், விளைநிலங்கள் வழியாக உயர் மின் கோபுரம் அமைக்கப்பட்டு வருவது தொடர்பான விவசாயிகளின் ஆலோசனைக் கூட்டம் ஊதியூர் அருகே நிழலிகவுண்டம்பாளையத்தில் புதன்கிழமை நடைபெற்றது. இதில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கலந்து கொண்டு பேசினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

விளைநிலங்கள் வழியாக உயர் மின் கோபுரம் அமைக்கப்பட்டால் விவசாயிகளின் வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்படும். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உண்ணாவிரதம் இருக்க நினைக்கும் விவசாயிகளை காவல் துறையினர் மிரட்டுகின்றனர். தமிழக அரசு ஜனநாயக விரோதமான அரசாக உள்ளது.

மின்சாரத்தை பூமிக்கு அடியில் கேபிள்கள் மூலம் கொண்டு செல்லலாமே? நகரங்களில் கேபிள் மூலம் மின்சாரத்தைக் கொண்டு செல்லும் அரசு, கிராமப் பகுதிகளில் ஏன் மறுக்கிறது? அரசின் இந்த நிலை இப்படியே தொடர்ந்தால் விவசாயிகளின் போராட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாது என்றார்.

ஈரோடு முன்னாள் எம்.பி. கணேசமூர்த்தி, தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் செயலாளர் முத்துவிஸ்வநாதன், தலைவர் ராஜாமணி, தற்சார்பு விவசாய சங்கத்தின் தலைவர் கி.வே.பொன்னையன் உள்பட 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

சிறை சென்று திரும்பிய விவசாயிகளுக்கு பாராட்டு: ஈரோடு மாவட்டம், சென்னிமலையை அடுத்த முதலியாக்கவுண்டன்வலசு என்ற கிராமத்தில் விவசாய நிலங்களில் உயர் மின் கோபுரங்கள் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து விவசாயிகள் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் மீது வெள்ளோடு போலீஸார் வழக்குப் பதிவு செய்து அவர்களை கைது செய்து சிறையில் அடைத்தனர். அவர்கள் ஜாமீனில் அண்மையில் வெளியில் வந்தனர்.

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, முதலியாக்கவுண்டன்வலசு கிராமத்துக்கு செவ்வாய்க்கிழமை இரவு 10 மணிக்கு வந்தார். சிறையில் இருந்து ஜாமீனில் வெளி வந்த விவசாயிகளுக்குப் பொன்னாடை அணிவித்து அவர்களுக்கு வைகோ வாழ்த்துத் தெரிவித்தார்.

ஐசிஏஐ புதிய தலைவராக பி.பிரஃபுல்லா சாஜத் தேர்வு

சென்னை, பிப்.13: இந்திய கணக்குத் தணிக்கை நிறுவன (ஐசிஏஐ) புதிய தலைவராக கணக்குத் தணிக்கையாளர் பி.பிரஃபுல் சாஜத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். துணைத் தலைவராக கணக்குத் தணிக்கையாளர் அதுல் குமார் குப்தா தேர்வாகியுள்ளார்.

பி.பிரஃபுல்லா சாஜத்.

அதுல் குமார் குப்தா

இதுதொடர்பாக ஐசிஏஐ வெளியிட்ட செய்திக்குறிப்பு:

ஐசிஏஐ கவுன்சில் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் ஐசிஏஐ-க்கான புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். அதன்படி, ஐசிஏஐ-யின் 2019-20 ஆம் ஆண்டுக்கான 67 ஆவது தலைவராக மும்பையைச் சேர்ந்த கணக்குத் தணிக்கையாளர் பிரஃபுல் சாஜத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் ஐசிஏஐ- கணக்கு ஆராய்ச்சி அறக்கட்டளையின் தலைவராகவும், பல்வேறு நிறுவனங்கள் மற்றும் வங்கி வாரியங்களில் உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.

அதுபோல, இதன் துணைத் தலைவராக தில்லியைச் சேர்ந்த கணக்குத் தணிக்கையாளர் அதுல் குமார் குப்தா தேர்வு செய்யப்பட்டுள்ளார். சட்டப் படிப்பையும் மேற்கொண்டிருக்கும் அவர், சி.ஏ. தேர்வில் அகில இந்திய அளவிலான ரேங்க் பெற்று தேர்ச்சி பெற்றவர். பல்வேறு நிறுவனங்கள் மற்றும் கல்விநிறுவனங்களில் இவர் உறுப்பினராக இருந்து வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாஜக தலைவர் அமித் ஷா இன்று ஈரோடு வருகை

ஈரோடு, பிப். 13: பாஜக அகில இந்தியத் தலைவர் அமித் ஷா ஈரோட்டுக்கு வியாழக்கிழமை வருகிறார். சித்தோடு அருகே கட்சி நிர்வாகிகள் பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகிறார்.

பிரதமர் மோடி கடந்தஞாயிற்றுக்கிழமை திருப்பூரில் நடைபெற்ற பிரமாண்டப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கிச் சென்றுள்ள நிலையில், பாஜக தேசியத் தலைவர் அமித் ஷா ஈரோட்டுக்கு வியாழக்கிழமை (பிப்ரவரி 14) வருகிறார்.

புதுதில்லியில் இருந்து விமானம் மூலம் புறப்பட்டு வியாழக்கிழமை காலை கோவை விமானம் நிலையம் வந்தடைகிறார். அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் ஈரோடு மாவட்டம், சித்தோடு அருகே உள்ள டெக்ஸ்வேலியில் வந்து இறங்குகிறார். அங்கு, காலை 11 மணிக்கு நெசவாளர்கள் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுகிறார்.

இதையடுத்து பகல் 12 மணிக்கு சித்தோடு - பெருந்துறை சாலையில் உள்ள ஸ்ரீநகரில் வாக்குச் சாவடி நிர்வாகிகளைச் சந்திக்கிறார். தொடர்ந்து, கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த ஈரோடு, திருப்பூர், கோவை, நாமக்கல் மாவட்ட பாஜக நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்த உள்ளார்.

இந்தக் கூட்டத்தில், மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன், மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன், அகில இந்திய பொதுச் செயலாளர் முரளிதர் ராவ், தேசியச் செயலாளர் ஹெச். ராஜா, முன்னாள் மாநிலத் தலைவர்கள் இல.கணேசன், சி.பி.ராதாகிருஷ்ணன், மாநிலபொதுச்செயலாளர் வானதி சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர். இதையடுத்து கங்காபுரத்தில் நடைபெறும் பாஜக பொதுக் கூட்டத்தில் பேசுகிறார். பிற்பகல் 3 மணியளவில் கோவை சென்று அங்கிருந்து விமானம் மூலம் புது தில்லி திரும்புகிறார் என கட்சியின் ஈரோடு மாவட்ட செய்தித் தொடர்பாளர் ஏ.பி. கிருஷ்ணகுமார் தெரிவித்துள்ளார்.

1,111 ஆசிரியர்களை மீண்டும் பணியில் சேர்க்க உத்தரவு

ஒழுங்கு நடவடிக்கை தொடரும்

சென்னை, பிப். 13: ஜாக்டோ ஜியோ போராட்டத்தில் ஈடுபட்டு பணியிடை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை, மாணவர்களின் நலன் கருதி மீண்டும் பணியில் சேர்க்க பள்ளிக் கல்வி இயக்குநர் வி.சி.ராமேஸ்வரமுருகன் உத்தரவிட்டுள்ளார்.

புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட 11 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கடந்த ஜனவரி 22-ஆம் தேதி முதல் ஜனவரி 30-ஆம் தேதி வரை போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பொதுமக்கள், மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1,111 ஆசிரியர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். அதே போன்று மாவட்டத்துக்குள் பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். இந்த நிலையில் முதல்வரின் கோரிக்கையை ஏற்று போராட்டத்தைக் கைவிட்ட ஆசிரியர்கள் ஜனவரி 31-ஆம் தேதி முதல் பணிக்குத் திரும்பினர்.

அதே நேரத்தில் ஆசிரியர்கள் மீது எடுக்கப்பட்ட துறை ரீதியான நடவடிக்கைகளைத் திரும்பப் பெற வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ அமைப்பினர் தமிழக அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். இந்த நிலையில், தற்போது பணியிடை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் பணியில் சேர அனுமதிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் உத்தரவிட்டுள்ளார்.

ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட்டு... இது தொடர்பாக பள்ளிக் கல்வி இயக்குநர் ராமேஸ்வரமுருகன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு புதன்கிழமை அனுப்பியுள்ள சுற்றறிக்கை:

காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்கள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

தற்போது மேல்நிலை வகுப்புகளுக்கான செய்முறைத் தேர்வுகள் தொடங்கப்படவுள்ளதாலும், பத்தாம் வகுப்பு, பிளஸ் 2 வகுப்புகளுக்கான அரசுப் பொதுத் தேர்வுகள் விரைவில் தொடங்கவுள்ள நிலையிலும், மாணவர்கள் நலன் கருதி தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களை மீண்டும் பணியமர்த்துவது குறித்து மறு ஆய்வு செய்து எடுக்கப்படவுள்ள ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தை பள்ளிக் கல்வி இயக்கத்துக்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும்.

ஐஐடிடிஎம் மாணவர்களுக்கு சென்னை ஐ.ஐ.டி.-யில் நேரடி பிஎச்.டி. வாய்ப்பு

சென்னை, பிப்.13: காஞ்சிபுரத்தில் உள்ள இந்திய தகவல் தொழில்நுட்ப வடிவமைப்பு மற்றும் உற்பத்தி (ஐஐடிடிஎம்) நிறுவனம் மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம், அங்கு படிப்பில் சிறந்து விளங்கும் 10 சதவீத பி.டெக். மாணவர்கள் சென்னை ஐஐடி-யில் நேரடி பிஎச்.டி. படிப்பில் சேருவதற்கு வாய்ப்பு உருவாகியுள்ளது. இதுதொடர்பாக சென்னை ஐஐடி புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சென்னை ஐஐடி-யும், காஞ்சிபுரம் ஐஐடிடிஎம் நிறுவனமும் கூட்டு ஆராய்ச்சி மற்றும் கல்விக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக, ஐஐடிடிஎம் நிறுவனத்தில் பி.டெக். படிப்பில் சிறந்து விளங்கும் முதல் 10 சதவீத மாணவர்கள் அவர்களுடைய 6 ஆம் பருவத் தேர்வுக்குப் பிறகு சென்னை ஐஐடி-யில் நேரடி பிஎச்.டி. (ஆராய்ச்சி) படிப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவர். அதன் பிறகு அவர்கள் பி.டெக். படிப்புக்கான 7 ஆம் பருவம், 8 பருவத் தேர்வுகளை சென்னை ஐஐடி-யில் முடித்துக்கொள்ள முடியும். அதோடு, இரு நிறுவன ஆசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் கூட்டு ஆராய்ச்சி, கல்வித் திட்டங்களிலும் ஈடுபட இந்த ஒப்பந்தம் வழிவகுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4 ஐ.பி.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம்

திருப்பூர் மாநகர காவல் ஆணையர் மாற்றம்

சென்னை, பிப். 13: தமிழக காவல்துறையில் 4 ஐ.பி.எஸ். அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழக அரசு புதன்கிழமை உத்தரவிட்டது.

இது குறித்து தமிழக அரசின் உள்துறை கூடுதல் தலைமைச் செயலர் நிரஞ்சன்மார்டி புதன்கிழமை வெளியிட்ட உத்தரவு (அடைப்புக்குள் பழைய பதவி):

எஸ்.மனோகரன்–சென்னை பொருளாதார குற்றப்பிரிவு ஐ.ஜி. (திருப்பூர் மாநகர காவல் ஆணையர்).

சஞ்சய்குமார்–திருப்பூர் மாநகர காவல் ஆணையர் (சென்னை பொருளாதார குற்றப்பிரிவு ஐ.ஜி.).

ஆர்.ஜெயந்தி–ராஜபாளையம் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 11-ஆவது அணி கமாண்டன்ட் (மதுரை மாநகர காவல்துறை குற்றப்பிரிவு துணை ஆணையர்).

டி.செந்தில்குமார்–மதுரை மாநகர காவல் துறை குற்றப்பிரிவு துணை ஆணையர் (ராஜபாளையம் தமிழ்நாடு சிறப்பு காவல் படை 11ஆவது அணி கமாண்டன்ட்).

PRASAR BHARATI
(India's Public Service Broadcaster)
OFFICE OF THE ADDITIONAL DIRECTOR GENERAL (ENGG) (SZ)
ALL INDIA RADIO & DOORDARSHAN, CHENNAI-5.

NOTICE INVITING E-TENDER

e- Tenders are invited for Providing Manpower from the eligible reputed firms/ Contractors having related experience in two bid system.

Tender No.	Name of the work	Submission Date
ADG(E)(SZ) / NIT-19 /MANPOWER / 2019-2020	Providing of Manpower (33 persons) at O/o the ADG/E/SZ/SZ,AIR & TV, Chennai	22-02-2019 before 14:30 Hrs

For any further details ,Terms & Conditions Kindly Log on to https://www.tenderwizard.com/PB
Amendments / Corrigendum / Extension if any would be posted on above website only.
DAVP 22507/11/0022/1819.

உடனடிச் செய்திகள் சூடாக சுருக்கமாக...
www.dinamani.com

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தஞ்சாவூர் மாவட்டம்
ஒப்பந்தப்புள்ளி கோரும் படிவம் எண்.439/2019/அ3 நாள் : 12-02-2019

1.தமிழக ஆளுநருக்காகவும், அவரது சார்பாகவும், தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரால் முதன்மை மானிய நிதி 80% 2018-2019 திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் மேம்பாடு செய்தல் / வலுப்படுத்துதல் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறையில்) 28.02.2019 மாலை 3.00 மணிவரை வரவேற்கப்படுகின்றன.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் அரச இணையதளம் www.tntenders.gov.in-ல் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
3.ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 14.02.2019 முதல் 28.02.2019 வரை அரச இணையதளத்தில் கிடைக்கும்.
4. முன் வைப்புத் தொகை ஒப்பந்த மதிப்பில் ஒரு சதவீதம்.
5. மேலும், விபரங்கள் தேவைப்படின் திட்ட இயக்குநர், மாவட்டஊரக வளர்ச்சி முகமை, தஞ்சாவூர் அலுவலகத்தினை அணுகவும்
6.முக்கியமான நாட்கள்.

1.	ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்	28.02.2019 பி.ப 3.00 மணிவரை
2.	தொழில்நுட்ப புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்	28.02.2019 பி.ப 4.00 மணி

7. இதர விபரங்கள் www.tntenders.gov.in -ல் தெரிந்துகொள்ளலாம்.

திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தஞ்சாவூர்.
செ.ம.தொ.இ.1079/ஒ.புள்ளி/2019

TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY
Directorate of Natural Resource Management
Coimbatore - 641 003, Tamil Nadu, India.
Ph:0422-6611406, 390 Fax:422-6611405 Email: nrm@tnau.ac.in
No. DNRM /ENS /TNAU-I&TC / NMSA-Lab / Purchase of Atomic Absorption Spectrophotometer (AAS) with accessories / 2019 dt. 13.02.2019

TENDER NOTICE

Tenders are invited in two-bid system (Technical Bid & Price Bid) from reputed manufacturers and their accredited/Sole dealers for the supply of the following equipment at TNAU-I&TC, Chennai-40.

Equipment	Qty Required	EMD (Rs.)	Last Date & Time	Opening date & Time
Atomic Absorption Spectrophotometer (AAS) with accessories	01 No.	40,000/-	28.02.2019 3.00 PM	28.02.2019 4.00 P.M

Pre-bid meeting to be held on 22.02.2019 at10.30 AM

Tender documents (Terms & Conditions) can be downloaded free of cost from http://sites.tnau.ac.in/tenders/ and http://tenders.tn.gov.in.

DIPR.1049/TENDER/2019 DIRECTOR, DNRM, TNAU, COIMBATORE.

EX SERVICEMEN CONTRIBUTORY HEALTH SCHEME (ECHS)
EMPLOYMENT NOTICE

1. ECHS invites application to engage following staff on contractual basis in ECHS polyclinic Erode for a period of one year subject to review of candidate's conduct and performance after eleven months.

Sl. No.	Category	No. of Vacancies	Percentage of vacancies	
			Ex-Servicemen	Open Vacancies
(a)	Medical Officer	01	60	40
(b)	Officer-In-Charge PC	01	100	-
(c)	Nursing Asst	01	70	30
(d)	Safaiwala	01	70	30

2. For terms and conditions, application form, remuneration, kindly see our website http:// www.echs.gov.in. For details please contact Stn ECHS Cell Air Force Station Sulur at Tele No. 0422/2683174. All applications should reach at Station HQ ECHS, Air Force Station Sulur, Coimbatore – 641401. Last date of receipt of application is 22 Feb 2019. Interview will be conducted on 25 Feb 19 at 1000h at Station HQ ECHS, Air Force Station Sulur. Candidate will bring original certificate/degree, photocopy of testimonials/experience, as applicable and two passport size photographs at the time of interview.

தமிழ்நாடு அரசு
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
நாமக்கல் மாவட்டம்
CAPITAL GRAND FUND 80% BALANCE ALLOCATION 2018-19
TENDER NOTICE No. 0286 /2019 /A8 Dated: 11.02.2019
இணையதள ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை

நாமக்கல் மாவட்டத்தில் 36 தார் சாலை பணிகள் சிப்பங்கள் வாரியாக ஒப்பந்தப்புள்ளி (இரண்டு உறைமுறை) திட்ட இயக்குநரால் வரவேற்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி நமூனாவை 27.02.2019 பிற்பகல் 3.00 மணி வரை www.tntenders.gov.in என்ற இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து சமர்ப்பிக்கலாம். பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 27.02.2019 பிற்பகல் 4.00 மணிக்கு திறக்கப்படும்.

திட்ட இயக்குநர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
நாமக்கல் மாவட்டம்
செ.ம.தொ.இ./ 1096 /ஒப்பந்தப்புள்ளி/2019

S.P. APPARELS LIMITED
CIN: L18101TZ2005PLC012295
Regd. Office: 39 – A, Extention Street, Kaikattipudur, Avinashi – 641 654, Tirupur, Tamilnadu.
Tel : +91-4296-714000, Fax : +91-4296-714280, 714281,
E-mail: csoffice@s-p-apparels.com, Website: www.spapparels.com

Extract of Unaudited Consolidated Financial Results for the quarter and Nine months ended December 31, 2018

(Rupees in millions except EPS and unless otherwise stated)

Sl. No	Particulars	Quarter ended 31-12-2018 (Unaudited)	Quarter ended 30-09-2018 (Unaudited)	Quarter ended 31-12-2017 (Unaudited)	Nine Months ended 31-12-2018 (Unaudited)	Nine Months ended 31-12-2017 (Unaudited)	For the year ended 31-03-2018 (Audited)
1.	Total income from operations	2,240.32	1,913.54	1,629.38	6,068.05	4,946.82	6,787.97
2.	Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and / or Extraordinary items#)	381.80	214.14	200.10	795.67	521.90	710.66
3.	Net Profit / (Loss) for the period before Tax, (after, Exceptional and / or Extraordinary items#)	381.80	214.14	200.10	795.67	521.90	710.66
4.	Net Profit / (Loss) for the period after Tax, (after, Exceptional and / or Extraordinary items#)	267.82	149.14	137.74	542.83	345.85	478.13
5.	Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)]	343.34	128.15	165.51	616.78	332.10	419.51
6.	'Paid-up equity share capital (face value Rs. 10/-) [Amount]	259,926,000	259,926,000	251,676,000	255,759,333	251,676,000	251,676,000
7.	Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year	-	-	-	-	-	3,720.28
8.	'Earning Per Share (Rs.) - Basic and Diluted [Net Profit/(loss) for the period after tax/Weighted average number of equity share	10.42	5.80	5.47	21.22	13.74	19.00
		(Not annualised)	(Not annualised)	(Not annualised)	(Not annualised)	(Not annualised)	(Annualised)

See accompanying notes to the Financial Results

Notes :

1. The above audited consolidated financial results for the quarter and nine months ended December 31, 2018 have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at their meeting held on February 13, 2019.
2. These financial results have been prepared in accordance with Indian Accounting Standard ('Ind As') prescribed under section 133 of the Companies Act, 2013 read with relevant rules thereunder and in terms of Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 and SEBI circular dated July 5, 2016.
3. Based on the internal reporting provided to the Chief of Decision Maker, the business of Garment sales is only the reportable segment of the company.
4. Effective 01.04.2018, the Company has adopted Ind AS 115, Revenue from contracts with customers which replaces earlier revenue recognition standards, using the cumulative effect method. The adoption of the standard did not have any material impact on the financials results for the quarter ended December 31, 2018.
5. In continuance to the approval received from shareholder through postal ballot on April 23, 2018 the company has:.
   - Redeemed preference share liability of INR 200 Million on June 4, 2018.
   - Alloted 525,000 equity share on preferential basis to the promoter of the company on June 4, 2018
6. The company has complied with relevant provisions of section 108 & 110 of the Companies Act, 2013 read with Rule 20 & 22 of the Companies (Management and Administration) Rules, 2014 (as amended) and Regulation 44 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015.
7. The utilisation of IPO proceeds is summarised as below (unaudited):-

Objects of the issue as per the Prospectus	As per Prospectus	Utilisation amount up to December 31, 2018	Unutilisation amount as of December 31, 2018
Expansion and modernization of manufacturing facility	701.60	451.18	250.42
Repayment or prepayment of debt	630.00	630.00	-
Opening of new stores for the sale of 'Crocodile' products	278.50	190.90	87.60
Addition of balancing machineries for existing dyeing unit	49.10	49.10	-
General corporate purposes and Issue expenses	490.80	490.80	-
Total	2,150.00	1,811.98	338.02

The unutilised amount as at December 31, 2018 have been temporarily deployed in debt funds and fixed deposits.

8. Tax on Consolidated financial statements is calculated after adjusting subsidiaries profit with carried forward loss.
9. Previous period figures have been regrouped / reclassified, wherever necessary, to conform to the current period classification / presentation.

For S.P.Apparels Limited

Place : Avinashi
Date : February 13, 2019

P. Sundararajan
Managing Director
DIN : 00003380

V.Balaji
Chief Financial Officer

தி கே.சி.பி. லிமிடெட்
பதிவு அலுவலகம் : "ராமகிருஷ்ணா பில்டிங்ஸ்", 2, டாக்டர் பி.வி.செரியன் க்ரசண்ட், எழும்பூர், சென்னை 600 008. தொ.பே.: 66772600 ஃபேக்ஸ் : 66772620
ஈ-மெயில் : investor@kcp.co.in www.kcp.co.in CIN: L65991TN1941PLC001128

31.12.2018 அன்று முடிந்த காலாண்டு/9 மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத, தனித்தன்மையான நிதிநிலை அறிக்கையின் சுருக்கம்
(சமபங்கு பேட்டா தவிர, ரூ. இலட்சத்தில்)

வ. எண்.	விபரங்கள்	முடிவடைந்த 3 மாதங்கள்			முடிவடைந்த 9 மாதங்கள்		முடிவடைந்த ஆண்டு
		31.12.2018 தணிக்கை செய்யப்படாதது	30.09.2018 தணிக்கை செய்யப்படாதது	31.12.2017 தணிக்கை செய்யப்படாதது	31.12.2018 தணிக்கை செய்யப்படாதது	31.12.2017 தணிக்கை செய்யப்படாதது	31.03.2018 தணிக்கை செய்யப்பட்டது
1	செயல்பாடுகளின் மூலம் மொத்த வருமானம்	27478.01	29687.93	26710.35	85193.77	83161.70	110048.85
2	இந்தக் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி மற்றும் தனிச்சிறப்புள்ள இனங்களுக்கு முன்)	-853.86	2745.22	1971.34	3412.85	10330.25	12108.13
3	இந்தக் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) வரிக்கு முன் (தனிச்சிறப்புள்ள இனங்களுக்கு பின்)	-853.86	2745.22	1971.34	3412.85	10330.25	11236.92
4	இந்தக் காலத்திற்கான நிகர லாபம் வரிக்கு பின் (தனிச்சிறப்புள்ள இனங்களுக்கு பின்)	-380.76	2056.68	1439.93	2761.70	7457.23	8126.66
5	இந்தக் காலத்திற்கான முழுமையான வருமானம் [இந்தக் காலத்திற்கான வரிக்குப் பிந்தைய லாபம் மற்றும் வரிக்குப் பிந்தைய இதர முழுமையான வருமானங்களை உள்ளடக்கியது]	-418.33	1854.23	1517.50	2587.43	7352.01	8099.76
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (பங்கு ஒன்றுக்கு ஆவண மதிப்பு ரூ.1/-)	1289.21	1289.21	1289.21	1289.21	1289.21	1289.21
7	இதர சமபங்கு (மறுமதிப்பீடு ரிசர்வ் நீங்கலாக) (முந்தைய ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் உள்ளபடி)						45288.33
8	ஒரு பங்கு ஈட்டிய வருவாய் (ஆவண மதிப்பு ரூ.1/- ஒவ்வொன்றும்) (வருடாந்திரமல்ல) அடிப்படை & மாற்றியமைக்கப்பட்ட நிலையில்	-0.30	1.60	1.12	2.14	5.78	6.30

1. பட்டியல் மற்றும் வெளியீடு குறித்தத் தேவைகள் தொடர்பாக, செபி (SEBI) அமைப்பு 2015ம் ஆண்டு வழங்கியுள்ள வழிகாட்டுதலில் உள்ள விதிமுறை எண் 33ன் படி, பங்குச் சந்தைகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள, 31 டிசம்பர் 2018 அன்று முடிந்த காலாண்டு / 9 மாதங்களுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் மேலே தரப்பட்டுள்ளது. முழுவடிவிலான காலாண்டிற்கான நிதிநிலை முடிவுகளை (www.nseindia.com மற்றும் www.bseindia.com) என்ற பங்கு வர்த்தக இணையதளங்களிலும் மற்றும் www.kcp.co.in என்ற கம்பெனி இணையதளத்திலும் காணலாம்.
2. ஏப்ரல் 1, 2018 முதல், கம்பெனி "வாடிக்கையாளர்களுடன் ஒப்பந்தங்களிலிருந்து பெறும் வருமானத்தில்" Ind AS 115 முறையை ஏற்றுக் கொண்டு, ஏப்ரல் 1, 2018ம் தேதியிலுள்ள வாடிக்கையாளர்களுடன் கூடிய ஒப்பந்தங்களுக்கு உகந்த வகையில் பயன்படுத்தியுள்ளது. Ind AS 115ன் பயன்பாடு, வருவாய் அங்கீகாரம் மற்றும் அளவீடுகள் மற்றும் நிதிநிலை முடிவுகள் தொடர்புடைய பொருட்களில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.
3. மேற்கண்ட முடிவுகள், 13.02.2019 அன்று நடந்த கூட்டங்களில் மறு ஆய்வு செய்யப்பட்டு, தணிக்கையாளர் குழு மற்றும் கம்பெனியின் இயக்குநர்கள் குழுவினரால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இயக்குநர் குழு சார்பாக
கேசிபி லிமிடெடுக்காக
V.L. இந்திரா தத்
நிர்வாக இயக்குநர்

இடம் : சென்னை–600 008
தேதி : 13.02.2019